செ.வெ.எண்: 40 நாள்:12.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து மருத்துவ அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் மருத்துவப்பணிகள் குறித்து அனைத்து மருத்துவ அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.08.2016) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

நமது மாவட்டத்தில் பொது சுகாதாரத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் பணிகள் முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் அனைத்து மருத்துவ அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தில் ஜுலை மாதத்திற்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட நலச்சங்கம், மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம், தேசிய காசநோய் தடுப்புத்திட்டப்பணிகள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகப்பணிகள், அரசு அலுவலர்களுக்கான மருத்துவக்காப்பீட்டுத்திட்டம், தனியார் மருத்துவமனை குடும்பநல அறுவை சிகிச்சை செய்திட அங்கீகாரம் வழங்குதல், டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித்திட்டம், நோயாளர் நலச்சங்கம், சீமாங் திட்டம், இரத்தவங்கி செயல்பாடு மற்றும் அனைத்து சுகாதாரத்திட்டங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதாரநிலையங்களில் குழந்தை பிறப்பு விகிதம், சுகப்பிரசவம், அறுவை சிகிச்சை விபரம், உள்நோயாளிகள் மற்றும் புற நோயாளிகள் எண்ணிக்கை, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள், கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து, 108 பயன்பாடு, குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்த விபரம், டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் விபரம் போன்ற பல்வேறு மருத்துவ செயல்பாடுகள் மற்றும் பணிகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது கர்ப்பிணி தாய்மார்கள் சுகப்பிரசவம் ஆகும் வகையில் கர்ப்ப காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து விளக்கமாக எடுத்துரைக்கவும், கிராமங்கள் மற்றும் நகரங்களில் குடும்பக்கட்டுப்பாடு அறுவைசிகிச்சையின் அவசியம் மற்றும் குடும்பக்கட்டுப்பாடு சாதனங்கள் குறித்து பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், எச்.ஐ.வி-ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் கவுன்சிலிங் மற்றும் கூட்டு மருந்து சிகிச்சையினை தொடர்ந்து வழங்கவும், பள்ளிகளில் 6ம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் கண் பரிசோதனை மேற்கொள்ளவும், 3 வயதுக்குரிய காதுகேளாத மற்றும் பிற குறைபாடுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளை கண்டறிந்து மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கவும், மேலும் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிப்பதுடன் தமிழகஅரசின் அனைத்து மருத்துவ நலத்திட்டங்களையும் பொதுமக்களிடம் சிறப்பான முறையில் கொண்டு சேர்க்க அனைத்து மருத்துவ அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியின் சார்பில் காரையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொடர்ந்து 26 ஆண்டுகள் சிறப்பாக பணிபுரிந்த காரையூர் வட்டார மருத்துவ அலுவலர் மரு.டி.நவரத்தினசாமி அவர்களை பாராட்டி சால்வை அணிவித்து கேடயத்தினை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.டி.பரிமளதேவி, இணை இயக்குநர் (பொது சுகாதாரம்) (பொ) மரு.சையது மொய்தீன், துணை இயக்குநர்கள் (புதுக்கோட்டை) மரு.பரணீதரன், மரு.கலைவாணி (அறந்தாங்கி) மற்றும் மருத்துவ அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**